DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 120/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | LW8 as PW5 | | | |
| Name | : | மனோஜ்குமார் | Age | : | 52 |
| S/o | : | சம்பத்குமார் | Occupation | : | மருத்துவர் |
| Village | : | | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 06th day of February 2026.

**06.02.2026**

**(1 மற்றும் 2 வது எதிரிகள் ஆஜர். 3, 4, 5 வது எதிரிகள் ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நிலைய மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 24.05.2018 ல் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது காலை 08.35 மணியளவில் 55 வயது மதிக்கத்தக்க திராவிட செல்வம் என்பவர் அவருடைய மருமகன் மகேஷ்வரன் என்பவரால் சிகிச்சைக்கு அழைத்துவரப்பட்டார். அவர் கூறியதாவது அன்று காலை 07.30 மணியளவில் தன்னுடைய வீட்டின் முன்னால் வைத்து தனக்கு அடையாளம் தெரிந்த ஒரு நபர் தன்னை கல்லால் தாக்கியதாக தெரிவித்தார். அவரை பரிசோதித்த போது உச்சந்தலையில் 3X0.5 ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு தலைக்கு சிடி ஸ்கேன் எடுத்து பார்க்கப்பட்டது. அவர் 08.06.2018 அன்று சிகிச்சை முடித்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றளித்தேன். **(நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. கல்லால் தாக்கும் போது மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

கையை நீட்டிக்கொண்டிருக்கும் எந்த பொருளின் மீதும் பட்டால் அல்லது கீழே விழுந்தால், இடித்தால் மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். குலவிக்கல்லை வைத்து அடித்தால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. அவ்வாறு குலவிக்கல்லால் தாக்கினால் பெரிய அளவிலான சிதைந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**மறுவிசாணை – இல்லை**

SUJITH
Digitally signed by SUJITH
Date: 2026.02.06 20:09:28 +0530